பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 07 2026** **12 40**

செவ்வாய்க்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இந்தியா - இந்தோனேஷியா நாடுகளுக்கிடையேயான உறவுகள் வலுவடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு இந்தோனேஷியாவின் மிக உயரிய **Bintang Adipurna** விருது வழங்கி கௌரவிக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் தெரிவித்துள்ளார்.

**3.** மகாராஷ்டிராவில் பெய்துவரும் கனமழை காரணமாக மும்பை, புனே உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இயல்வு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**4.** வெனிசுலாவில் நேரிட்ட நிலநடுக்கத்தில் **3** ஆயிரத்து **700** கோடி டாலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

**5.** **20** வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்தப் போட்டியில் இந்தியா **4** தங்கம் உட்பட **20** பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - இந்தோனேஷியா நாடுகளுக்கிடையேயான உறவுகள் வலுவடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியா தலைநகர் ஜகார்த்தாவில் அந்நாட்டு அதிபர் **Prabowo Subianto** உடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து துறைகளிலும் இரு நாடுகளும் ஒத்துழைத்து முன்னேறுவதாக தெரிவித்தார்.

தொழில்நுட்பம், கலாச்சாரம், கல்வி, பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் இரு நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு மேம்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்தோனேஷிய மருத்துவர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார்.

இந்தோனேஷியாவின் உணவுப் பாதுகாப்பிற்காக இந்தியாவின் கோதுமை விதைகள் அந்நாட்டுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

நமது நாட்டின் **UPI** பணப் பரிமாற்ற முறையை இந்தோனேஷிய பணப்பரிமாற்ற முறையுடன் இணைக்கப்போவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இதன் மூலம் இருநாட்டு வணிகர்கள் மற்றும் வர்த்தகர்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய இந்தோனேஷிய அதிபர் **Prabowo,** இந்தோனேஷிய நாட்டின் மிக உயரிய **Bintang Adipurna** விருது திரு. நரேந்திர மோடிக்கு வழங்கி கௌரவிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

முன்னதாக ஜகார்தாவில் தமக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதற்கு நன்றி தெரிவிப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

பிரதமர் நாளை உலகப்பிரசித்தி பெற்ற யுனெஸ்கோ பாரம்பரிய சின்னமான **Prambanan** கோவிலுக்குச் செல்ல உள்ளார்.

9ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்து கோவில் பாரம்பரிய கட்டடக்கலையில் பிரசித்தி பெற்றது.

மும்மூர்த்திகளான சிவா, விஷ்ணு, பிரம்மதேவர்களுக்கு கட்டப்பட்ட இந்த பழமையான கோவில் இந்தியா - இந்தோனேஷியா இடையேயான உறவுகளுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

<<<<>>>>

கூட்டுறவுத் துறையில் 30 கோடி மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் கூட்டுறவுத்துறை அமைச்சகத்தின் நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்த அமைச்சகத்தை கடந்த 2021-ல் தொடங்கியதாக கூறினார்.

இதன் மூலம் கூட்டுறவுத்துறை நவீனமயமாக்கப்பட்டதுடன், வெளிப்படைத்தன்மையும், தொழில்நுட்ப அடிப்படையில் மேம்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ள 8 லட்சத்து 58 ஆயிரம் கூட்டுறவு சங்கங்கள் குறித்த தகவல்கள் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் 55 ஆயிரம் வேளாண் கடன் சங்கங்கள் மூலம் ரயில் டிக்கெட் முன்பதிவு, பிறப்பு, இறப்பு பதிவுகள், அரசு நலத்திட்டங்கள் குறித்த விண்ணப்பங்களைப் பெறுவது உள்ளிட்ட சேவைகள் சிறப்பாக செய்து வருவதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

பிரிக்ஸ் மகளிர் அமைச்சர்கள் அளவிலான கூட்டம் கேரள மாநிலம் கொச்சியில் நாளை தொடங்குகிறது.

மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மகளிர் மேம்பாடு குறித்து முக்கியமாக விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்திய கடற்படையின் போர்க்கப்பல் மகேந்திரகிரி விசாகப்பட்டினத்தில் வரும் சனிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சியில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது.

பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மும்பையில் **Mazagone** கப்பல் கட்டும் தளத்தில் இந்த போர்க்கப்பல் கட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போர்க் கப்பலின் **75** சதவீத பாகங்கள் உள்நாட்லேயே உற்பத்தி செய்யப்பட்டது.

இந்தியப் பெருங்கடல் பகுதியிலும், இந்தோ-பசிபிக் கடல்சார் பாதுகாப்பிலும் மகேந்திரகிரி போர்க்கப்பல் முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

அமர்நாத் புனித யாத்திரையின் 6வது குழு இன்று காலை ஜம்முவில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

8 ஆயிரத்து 815 யாத்ரீகர்கள் ஜம்முவின் பகவதி நகர் முகாமில் இருந்து புறப்பட்டுச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதில் மூவாயிரத்து 989 பேர் Baltal வழியாகவும், 4 ஆயிரத்து 826 பேர் பஹல்காம் வழியாகவும் புறப்பட்டுச் சென்றனர்.

யாத்ரீகர்களின் பாதுகாப்புகாக காவல்துறையினர், மத்திய ரிசர்வ் காவல்படை உள்ளிட்ட பாதுகாப்பு படையினர் அப்பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் கனமழை காரணமாக மும்பை, புனே உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இயல்வு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

புனே, நாசிக், Palghar, Raigad பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதையடுத்து அப்பகுதிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படையும், மாநில பேரிடர் மீட்புப் படையும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

**Lonavla** பகுதியில் அதிகபட்சமாக **60** சென்டி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

இதையடுத்து அப்பகுதியில் சாலைப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மழை காரணமாக மும்பை, தானே, நவிமும்பை, **Palghar, Raigad**, ரத்னகிரி மாவட்டங்களில் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் தனியார் நிறுவனத்தில் நேற்றிரவு தீ விபத்து ஏற்பட்டது.

**8** தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீயை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக தலைமை தீயணைப்பு அதிகாரி திரு. பிரதீப் குமார் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் யாரும் காயமடையவில்லை என்றும் அவர் கூறினார்.

தனியார் நிறுவன காவலர் தீயணைப்புத் துறைக்கு தகவல் தெரிவித்ததையடுத்து உடனடியாக விரைந்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்ததாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

வெனிசுலாவில் கடந்த ஜூன் 24ஆம் தேதி நேரிட்ட நிலநடுக்கத்தில் 3 ஆயிரத்து 700 கோடி டாலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக நியூயார்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நா. செய்தித்தொடர்பாளர் Stephane, வீடுகள், பள்ளிகள், மருத்துவமனைகள் சேதமடைந்ததால் 2 ஆயிரத்து 400 கோடி டாலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், கட்டமைப்பு வசதிகள் சீர்குலைந்துள்ளதால் ஆயிரத்து 300 கோடி டாலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதனிடையே இந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 535ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதில் 16 ஆயிரத்து 840 பேர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் 17 ஆயிரத்து 854 பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

இந்நிலையில், இந்த நிலநடுக்கத்தால் ஆறரை லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 2 லட்சத்து 34 ஆயிரம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு உடனடியாக உதவியளிக்க வேண்டும் என்றும் ஐ.நா. சர்வதேச குழந்தைகள் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

பசிபிக் கடற்பகுதியில் சீனா நடத்திய ஏவுகணை சோதனைக்கு அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

அப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட அணு ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட ஏவுகணை சோதனை நடத்துவதை தவிர்க்க வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினரான சீனா, அணு ஆயுத ஏவுகணை சோதனை நடத்தக்கூடாது என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதியில் கோரிக்கைகளை நிறைவேற்ற **48** மணி நேர கெடுவை ஜம்மு-கஷ்மீர் அவாமி குழு கெடு விதித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டத்தில் காவல்துறையினர் **600** பேரை கைது செய்துள்ளனர்.

அனைத்து கோரிக்கைகளும் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று அந்த குழு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தாய்லாந்து பட்டாயாவில் நடைபெற்ற **20** வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்தப் போட்டியில் இந்தியா **4** தங்கம், **7** வெள்ளி, **9** வெண்கலப் பதக்கம் உட்பட **20** பதக்கங்களை வென்றுள்ளது.

மகளிர் பிரிவில் **184** புள்ளிகளுடன் இந்தியா இரண்டாவது இடத்தையும், ஆடவர் பிரிவில் **152** புள்ளிகளுடன் இந்தியா **3**வது இடத்தையும் பிடித்துள்ளன.

மகளிர் பிரிவில் இந்தியாவின் பர்வீன் **50** கிலோ எடைப் பிரிவிலும், முஸ்கான் **53** கிலோ எடைப் பிரிவிலும், காஜல் **76** கிலோ எடைப்பிரிவிலும் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

ஆடவர் பிரிவில் சுமித் குமார் 70 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார்.

-----------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அர்ஜென்டினா இன்று எகிப்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி அட்லாண்டாவில் இரவு மணி 9.30க்கு தொடங்குகிறது.

நள்ளிரவு 1.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து - கொலம்பியாவை எதிர்கொள்கிறது.

---------------

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் தொடரில் விளையாட உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஷ்ரேயஸ் அய்யர் தலைமையிலான இந்திய அணியில் சூர்யவன்ஷி, அபிஷேக் ஷர்மா, சிவம் தூபே உள்ளிட்ட 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி வரும் 23ஆம் தேதியும், 2வது

போட்டி வரும் 25ஆம் தேதியும், மூன்றாவது மற்றும் கடைசி போட்டி வரும் 26ஆம் தேதி நடைபெற உள்ளது.

மூன்று போட்டிகளும் ஹராரேயில் நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

---------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

Nottingham-ல் இப்போட்டி இரவு 10 மணிக்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>